DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

-----------------------------------------------------------------

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.693/2024**

**P.W.2**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | உமாராணி |
| Husband Name | : | தாண்டவராஜன் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.11.2025.
( எதிரி ஆஜர்.)

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>

நான் தற்போது அலங்காநல்லூர் அன்னைவேலு சிட்டி என்ற முகவரியில் வசிக்கிறேன். **அ.சா.1** திருசெல்வராணியை எனக்கு தெரியும். எனது கணவர் மதுரை மாவட்ட காவல்துறையில் சிறப்பு ஆய்வாளராக பணிபுரிகிறார். கடந்த 30.06.2023ம் தேதி, சுமார் இரவு 07.20 மணியளவில் நானும், **அ.சா.1** திருசெல்வராணி மற்றும் **சாட்சி எண்.3** இந்திராராணியும் அன்னைவேலு சிட்டி சந்திப்பில் வழக்கமாக பேசிக்கொண்டிருப்போம். நான் அப்போது குணிந்து செல்போன் பார்த்துக்கொண்டிருந்தேன். அப்போது, இருசக்கர வாகனத்தில் இரண்டு நபர்கள் எங்கள் தெருவிற்குள் இரண்டு சுற்று போய் வந்தார்கள். கண் இமைக்கும் நேரத்தில் ஆஜர் எதிரி **அ.சா.1** திருசெல்வராணியின் செயினை அறுத்துக்கொண்டு இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டார்கள். பிறகு நான் ஆட்களை கூப்பிடுவதற்காக எனது தெருவிற்குள் சென்றுவிட்டேன். பிறகு நாங்கள் **அ.சா.1** திருசெல்வராணியின் கணவருக்கு போன் செய்தோம். **அ.சா.1** திருசெல்வராணியின் கணவர் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார். அதன்பிறகு நாங்கள் அனைவரும் ஊமெச்சிகுளம் காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம். போலீஸார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

நான் போலீஸாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் சம்பவ இடத்தில் நான் கத்தினேன் என்றும் அக்கம் பக்கத்தில் யாரும் இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். சம்பவம் நடந்த 03.06.2023ம் தேதி இரவு 07.30 மணிக்கு அன்னை வேலுசிட்டிக்கு இருவர் தலைகவசம் அணிந்துவந்ததாகவும் அவர்களை நேரடியாக தெரியுமா என்றால் எனக்கு தெரியும். நான் போலீஸ் விசாரணையிலும் இரண்டு நபர்கள் தலைகவசம் அணிந்து வந்ததாகவும் அவர்கள் சுமார் 40 வயது மதிக்கதக்க நபர்கள் என்றும் சொல்லியுள்ளேன். வழக்கு சம்பவம் இரவு 07.30 நடந்தவுடனே காவல்துறைக்கு உடனே போன் மூலம் தகவல் தெரிவித்தோம். **அ.சா.1** திருசெல்வராணி மயக்க நிலையில் இருந்தால் நான் தான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. மறுநாள் 82.690 மில்லிகிராம் எடை கொண்ட 10 – ½ பவுன் தங்க தாலி செயின் கிடைத்துவிட்டது என்று காவல்நிலையத்தில் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். நான் புகார் கொடுத்ததால் என்னிடமும் சாட்சி கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள்.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

S/d - S.John Sundarlal Suresh, B.Sc., M.L.,
IV Additional District and Sessions Judge, Madurai.